Regd. No. M. 4593. "KUDI ARASU" 12 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 } சனி, 24-2-1945 மாசி-மீ 13உ { இதழ் 20

## மாணவர்களும் பொதுநலத்தொண்டும்

### பெரியார் பேருரை

18-2-45-ல் திருச்சி வடமண்டல திராவிட மாணவர் மாநாட்டைத் திறந்து வைத்தபோது மூவாயிரம் மாணவர்களுக்கிடையில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு:-

தோழர்களே!

இப்போது நம்நாட்டில் எங்குபார்த்தாலும் மாணவர்மாநாடுகூட்டப்பட்டு வருகிறது. அப்படிக் கூடுவதில் ஆரியர்கள் முயற்சியில், ஆரியர்கள் ஆதிக்கத்தில், ஆரிய மாணவர்களால் கூட்டப்படும் மாணவர் மாநாடு என்பதாக சிலவும், ஆரியமுயற்சியோ, ஆரிய ஆதிக்கமோ, ஆரிய மாணவர் கலப்போ சிறிதும் இல்லாமல் திராவிடமாணவர்களாலேயே கூட்டப்படுவன பலவுமாக இருந்துவருவதைக் காண்கின்றோம்.

ஆரிய ஆதிக்க, ஆரிய மாணவர் பெரிதும்கொண்ட கூடுதல் கூறப்பட்ட மாநாடுகளின் நடவடிக்கைகள் தேசியம் என்கின்ற ஆரிய சூழ்ச்சியை அடிப்படையாய் வைத்து இந்நாட்டில் என்றும் திராவிடர்கள் மீது ஆரிய ஆதிக்கமும் சுரண்டலும் நிலைத்துவருவதற்கே பாதுகாப்பாக நடந்து வந்ததையும் வருவதையும் காண்கின்றோம். மேலும் அந்த ஆரிய ஆதிக்க மாணவர் மாநாட்டில் திராவிட மாணவர்கள் சிலர் கலந்திருந்தாலும் அவர்களுக்கு (அத்திராவிட மாணவர்களுக்கு) தங்கள் (திராவிட) நாட்டைப் பற்றியோ தங்கள் (திராவிட) இனத்தைப்பற்றியோ கவலை இல்லாததும், அவைகளைப்பற்றி அம்மாநாட்டில் சிறிதும் பேசக்கூடாத நிபந்தனைக்குள் அடங்கியதும்ஆன ஆரியக்கூலி, ஆரிய அடிவருடி, திராவிடத் தன்மானமற்ற தன்மை கொண்ட யோக்கியதைதான் யோக்கியாம்சமாக இருந்து வருகிறது.

பின்னவர்களுக்கென்றாலோ திராவிடநாட்டுப் பற்றும், திராவிட இனப்பற்றும், தன்மானமும் ஆக்கிய ஆதிக்கமோ எனக் கொண்ட யோக்கியதாம்சம் இருந்து வருகிறது.

இந்தக் குறிக்கோள் உணர்ச்சியானது இதுவரை திராவிட மக்களுக்கு அவர்களது கல்வியாலும் 'தேசியத்தாலும்' மற்றும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆரியர்களாலும் கடுகளவுகூட ஏற்படுவதற்கு இடமில்லாமல் போனதோடு இவை அடியோடு மறந்துவிடுவதற்கு அனுகூலமாகவே செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

இந்த நாட்டில் ஆரியத்திற்கும் ஆரிய தேசியத்திற்கும் எதிராக எத்தனையோ நாளாக எவ்வளவோ முயற்சிகள் செய்யப்பட்டுவந்தும் திராவிட மாணவர்களுக்கு சிறிதுகூட உணர்ச்சி ஏற்படமுடியாமலே இருந்து வந்திருக்கின்றது.

மற்றும் நான் முன் சொன்னது போல், திராவிட மாணவர்களுக்கு இந்நிலை ஏற்பட அவர்களது கல்வி, கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், கல்வி ஸ்தாபனம், அதை நடத்தும் ஆட்சி ஆகியவைகளும் காரணமாக இருந்து வருகிறது. ஏன்? மேற்கண்ட யாவற்றிலும் ஆரியம் தான் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இவைகளை எவர் மறுக்க முடியும்?

### சர்க்கார் தன்மை

நம் சர்க்காருக்கு நம் கல்வியைப் பற்றி உள்ள கவலை எல்லாம், தாங்கள் இந்த நாட்டில் நிலைத்து ஆட்சி செலுத்த இந்த நாட்டு மக்களே நமக்கு நிபந்தனை இல்லாத அடிமைகளாயிருக்க போட்டி போட்டுக் கொண்டு வந்து நம் காலடியில் விழுந்து, கிடக்கத் தகுதி உடைய மாதிரி கல்வி இருக்கவேண்டும் என்பது முக்கியமாகும். அதற்கு அவர்களுக்குத் தரகர்களாக இருந்து நடத்திக் கொடுப்பவர்கள் இந்த நாட்டு ஆரியர்களேயாகும், இதற்கு சர்க்கார் இந்த ஆரியர்களுக்குக் கொடுக்கும் பிரதிபலன் கல்வியையும், கல்வி கற்பிப்பதையும் அதை நிர்வகிப்பதையும் ஆரியரிடம் ஒப்புவித்து அவர்களுக்கு வாரமாக ஆசிரியர் பதவி, பாடப் புத்தகம் எழுதல், பரீட்சை திருத்தல், கல்வி அதிகாரி ஆகியவை போரால் சம்பளம் சன்மானம் வருமானம் ஆகியவைகளுக்கு அள்ளிக் கொடுத்து வருவதேயாகும்.

ஆரியர்கள் இந்தக் காரியங்களால் இந்த நிலையைத் தங்களுக்கு ஆக்கிக் கொண்டு, இவற்றின் மூலம் சர்க்காருக்கு அடிமைகளைக் கொடுத்து உதவுவதோடு, தங்கள் ஆதிக்கத்திற்கும் வசதி செய்து கொண்டு, இந்த நாட்டு மாணவர்களை நான் மேற்சொன்னமாதிரி நாட்டுப் பற்று, இனப்பற்று, மானப்பற்று இல்லாமல் செய்து வருவதுடன் அவன் (மாணவன்) மூளையையும் கெடுத்து முட்டாள் மூடநம்பிக்கைக்காரனாக்கி, அவனை மனிதத்தன்மைக்கே லாயக்கற்றவர்களாக ஆக்கி தங்களுக்கும் நிரந்தர அடிமையாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள்.

### கல்வி கற்றவர் நிலை

இதனால்தான் இன்று சமீபகாலம் வரை இந்தக் கல்விகற்ற ஒரு திராவிடனுக்குக்கூட நாட்டுப்பற்று, இனப்பற்று, மானப்பற்று இருப்பதைக் காணுவது மிகமிகக் கஷ்டமாக இருக்கிறது. ஆங்கிலம் கற்றவர்களுக்குள்ளும் இல்லை, தமிழ் கற்றவர்களுக்குள்ளும் இல்லை என்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது.

உதாரணமாக திராவிட மக்களில் ஆங்கில உயர்தரக் கல்வி கற்று உயர்ந்த பட்டம் பெற்று கல்வி இலாகா முதல் பெரும் பெரும் பதவிகள் பெற்று உயர் நிலை அனுபவித்தவர்களில் இன்று எத்தனை பேருக்கு இனப்பற்று நாட்டுப் பற்று இருக்கிறது என்பதாகக் கணக்கு போட்டுப் பாருங்கள். ஆனால் இவர்களில் எதிரிகளுக்கு அடிமையாய், கையாளாய், ஆதரவாளர்களாய், எதிரிகளின் ஆதிக்க ஆதாரங்களைப் பிரசாரம் செய்யும் கூலிகளாய் இல்லாதவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணக்குப் பாருங்கள். பின்னவர்களில் இந்தப்படி இல்லாதவர்களைக் காண்பதே அரிதாய் இருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன்.

## கல்வியின் தன்மை

இதற்கு ஆக நான் இந்தப்படியான அதாவது இக்கல்வி கற்ற திராவிட நபர்களின் மீது குற்றம் சொல்லவரவில்லை. மற்றென்னவென்றால் அந்தக் கல்வியின் தன்மையும் பயனும் அப்படிப்பட்டதென்றும், அது இனியும் நம் மக்களைப் பெரிதும் அப்படித்தான் செய்யும் என்றும் சொல்லுவதற்காகவே இதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

இதை நீங்கள் முதலில் உணரவேண்டும். பொதுவாகவே இந்த இன்றைய கல்வியின் தன்மையையும் பயனையும் பற்றி நான் மாத்திரம் இப்படிச் சொல்லவில்லை. சுமார் 30 வருஷங்களுக்கு மேலாகவே அனேக கல்வியாளர்கள், பொதுஜனத் தலைவர்கள் என்பவர்கள், பேரறிவாளர்கள் என்பவர்கள் குறைகூறி வந்திருக்கிறார்கள்.

"இந்தக் கல்வி அடிமைக் கல்வி" என்றும், 'அறிவுக்கு ஏற்றதல்ல'வென்றும் சொல்லிவந்திருக்கிறார்கள். சமீப 30 வருஷ காலத்தில் இன்றைய கல்வியை இகழாதவர்களும், புகழ்ந்து கூறியவர்களும் மிகமிக அரிதாகும்.

## காந்தியார் சொன்னதே இது

மற்றும் இன்றைக்கு 25 வருஷங்களுக்கு முன்னால் காந்தியார் மாணவர்களைப் பள்ளியைவிட்டு வெளியில் வந்து சமுதாய அரசியல் தொண்டாற்றும்படியும், சர்க்காரோடு ஒத்துழையாமையும், மறியலும், சட்டமறுப்பும் செய்யும்படியும் அழைத்த காலத்திலும் மாணவர்களுக்கு எடுத்துச் சொன்ன காரணங்களில் 'இந்தக் கல்வி பயனற்றது, அடிமைத்தன்மை பயக்கக்கூடியது, நாட்டுப்பற்றை மறக்கடிப்பது' என்றெல்லாம் சொல்லி இருக்கிறார். அந்த வார்த்தையைக் கேட்டுத்தான் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பள்ளியைவிட்டு வெளிவந்து காங்கரஸ் தொண்டாற்றி, காங்கரஸ் என்னும் ஆரிய ஸ்தாபனத்தை இன்றைய நிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஆகவே இந்தக்கல்வி பயனற்றது என்றும் இதைவிட்டு வெளிவந்து மாணவர்கள் நாட்டுக்கும், இனத்துக்கும் பாடுபட வேண்டியது மாணவர் கடமை என்றும் சொல்லுவது குற்றமுடையதாகவோ புதியதாகவோ ஆகிவிடாது என்கின்றேன்.

## மாணவர்களும் பொதுநலத் தொண்டும்

மாணவர்கள் பொதுநலத் தொண்டாற்றுவது கூடாது என்று யாரும் சொல்லமுடியாது. சுய நலனுக்கு ஆக தன் மகனைப் படிக்கவைக்கின்ற பெற்றோருக்கும் சுயநல வாழ்வுக்கு ஆகவே படிக்கும் மாணவனுக்கும் வேண்டுமானால் மாணவர் பொதுத்தொண்டாற்றுவது குற்றம் என்னலாம். அல்லது இக்கல்வியினால் பொதுநல உணர்ச்சி அறிவுப் பெருக்கம் ஏற்படுகிறது என்றாவது குறைப்பிப்பதானால் இந்தப் பருவத்தை கல்விக்கும் பொதுநலத் தொண்டிற்கும் சேர்ந்து பயன்படுத்துவது கல்விக்குக் குந்தகமாகும் என்று சொல்லலாம்.

எப்படி இருந்தபோதிலும் இன்று பொதுநலத்தொண்டாற்றுவதற்கு அதாவது நம்நாட்டின் மேன்மைக்கும், இனத்தின் தன்மானத்துடன் கூடிய உயர்வுக்கும், வெகுகாலமாக நம் இனத்திற்கு இருந்துவரும் இழிவும், முற்போக்கு முட்டுக்கட்டையும், அன்னியன் சுரண்டலும், ஆதிக்கமும் ஒழியப் பாடுபடுவதற்கும் யாராவது ஒருவர் அல்லது ஒரு கூட்டம் இருந்துதானே ஆகவேண்டும். இக்காரியத்திற்கு பாடுபட இன்று நம்மில் யார் இருக்கிறார்கள்?

## முதலாளி படிப்பாளி வர்க்கம்

இராஜாக்களும், ஜமீன்தார்களும், இராஜா, சர், திவான் பகதூர் முதலிய பட்டவான்களும், கோடீஸ்வரர்களும், இலட்சாதிபதிகளும், ராஜமன்னார்களும், எதிராஜுலுகளும், கதிரேசர்களும், கல்யாணசுந்திரங்களும், மீனாட்சிசுந்திரங்களும், சிதம்பரநாதர்களும் ஆகிய பட்டம்பதவி செல்வம், வக்கீல் நிபுணத்துவம், தமிழ் புலமை முதலியவைகளில் விளம்பரம் பெற்றவர்களும் பயன்படுவார்களா? முன் வருவார்களா? அல்லது இதுவரை இக் கூட்டங்களால் தங்கள் நலனுக்கு பெருமைக்கு பதவிக்கு அல்லாமல் வேறு காரியம் அதாவது நம் இழிவு நீங்க நம் நாடு பெருமை பெற நம் சுரண்டல்கள் ஒழிய நம்மை இழிவுபடுத்தும் ஆதாரங்கள் ஒழிய ஏதாவது நடந்திருக்கிறதா?

கோவில்கட்டுவோர்கள், அன்னச் சத்திரம் மடம் கட்டுவோர்கள், ஆரிய ஆதிக்க ஆதாரங்களுக்கும், சமயத்திற்கும், சட்டத்திற்கும் அடிமைகளாகி அவற்றைப் பெருக்கி மற்ற மக்களையும் அதில் திருப்பிவிடுவார்கள்; அல்லது தன் காரியத்திற்கு எதையும் செய்வார்கள், அல்லது தன் காரியத்தைத் தவிர வேறு எதையும் சிந்தையில் கொள்ளார்கள். இவை தானே சாதாரணமாக இக்கூட்டத்தாரால் நடைபெற்று வருகின்றன?

மில் முதலாளிகள், வர்த்தகர்கள், பாங்கர்கள், டாக்டர்கள், வக்கீல்கள், குட்டிப் பண்டிதர்கள், உபாத்தியாயர்கள் ஆகியவர்களில் பெரும்பான்மை மக்களைப் பாருங்கள், பிரின்ஸ்பால்கள் வைஸ்சேன்ஸலர்கள், அதிகாரிகள் ஆகியவர்களையும் பாருங்கள். இவர்கள் இத்தனை பேர்களிலும் திராவிடர்களைப் பிறவி இழி மக்களாய்க் கருதும்படி செய்யும் ஆரியசமயத்தை வெறுத்தவர்கள், எத்தனைபேர்? ஆரியர்கள் ஆதிக்க ஆதாரங்களை வெறுத்தவர்கள் எத்தனை பேர்? மற்றதைச் சொல்ல வாய் கூசுகிறது.

## யாருக்கு இன உணர்ச்சி இருக்கிறது?

கடைசியாகச் சொல்லுகிறேன் உங்கள் பெற்றோர்களில் தானாகட்டும் எத்தனை பேருக்கு இன உணர்ச்சியும், இன இழிவை நீக்கவேண்டும் என்கின்ற மான உணர்ச்சியும் இருக்கிறது?

மற்றும் திராவிடரில் எந்தக் கூத்தாடிக்காவது காசுக்குப் பாடுகிறவனுக்கு ஆவது எத்தனை பேருக்கு இன, மான உணர்ச்சி இருக்கிறது? இதே தன்மைகளை எடுத்துக் கொண்டு அவை ஆரியர்களுக்குள் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.

## உங்களைத் தவிர வேறுகதி இல்லை

இந்த நிலையில் மாணவர்களே உங்களைத் தவிர இந்தக் கேடுகெட்ட நாட்டை இழிவுபட்ட இனத்தை மேம்படுத்த யார் இருக்கிறார்கள்? நீங்கள் இன்றைய படிப்பைப் படித்துத் தேறித்தான் என்னசெய்யப் போகிறீர்கள்? தேறுவதே கஷ்டம், தேர்ந்தவுடன் விண்ணப்பம் எழுதிக்கொண்டு வீணர்களின் வீட்டுவாயிலுக்கு சம்பள வேலை தேடி யாத்திரை திரியப் போகிறீர்கள். அதில் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்? வேலை கிடைத்தால்தான் நீங்கள் சாதிக்கப்போவதென்ன? லஞ்சம் வாங்காவிட்டால் பணம் மிஞ்சுமா? மானமிழக்காவிட்டால் உத்தியோகம் தான் மிஞ்சுமா?

## படித்தவர்களைப் பாருங்கள்

உங்களுக்கு முன்பு படித்து உத்தியோக வேலை பெற்று பதவிபெற்றுப் பிரபலமும் பணமும் பெற்ற திராவிட மக்களின் யோக்கியதையைப்பாருங்கள்.

முதலாவது வேலைக்குப் போனால் மந்திரியைக் கொன்று தின்றுவிட வேண்டும்; ஒரு சிறு 'பிரமோஷ'னுக்கு ஆக முன்பு வேலை வாங்கிக் கொடுத்தவன் கழுத்தைத் திருக சம்மதித்து புதுப்'பிரமோஷ'னுக்கு சிபார்சு செய்கிறவனுடையவோ அல்லது 'பிரமோஷன்'கொடுப்பவனுடையவோ கால் விரலை சப்பவேண்டும். இந்தப்படி நடக்காவிட்டால் (உத்தியோகத்தில்) வேலையில் முன்னேறவோ வெற்றிபெறவோ முடியாது. இவ்வளவும் செய்து பெரிய பதவி பெற்றுவிட்டதாகவே வைத்துக்கொண்டாலும் அதைக் காப்பாற்றிக்கொள்ளப் பாடுபடுவதைத் தவிர

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# திருச்சியில் வடமண்டல திராவிட மாணவர் மாநாடு

வடமண்டல திராவிட மாணவர்களின் மாநாடு 18-2-45 காலை 9 மணிக்கு திருச்சி முனிசிபல் பள்ளிக்ஹாலில் தோழர் ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ. அவர்கள் தலைமையில் கூடிற்று. சென்னை, தஞ்சை, கும்பகோணம், கூடலூர், சேலம், ஆரணி, சிதம்பரம், காரைக்குடி, ஈரோடு முதலிய பல இடங்களிலிருந்தும் மாணவத்தோழர்களும், மற்றும் பிரமுகஸ்தர்களும் வந்திருந்தனர்.

### எஸ். தவமணிஇராசன்

தோழர் எஸ். தவமணிஇராசன் கொடியை ஏற்றுவித்தார். நாட்டிலுள்ள காங்கரஸ் மாணவ இயக்கத்தையும், பொதுவுடைமைப் போர்வையிலுள்ள மாணவ இயக்கத்தையும், கண்டித்து மூவர்ணக் கொடி தேசியக்கொடியாக முடியாது; நாட்டிலே பற்பல கட்சிகளும் கொடிகளும் இருப்பதை எடுத்துக்காட்டி அது வருணாச்சிரம கொடி எனக் கூறிக் கண்டித்து பொதுவுடைமையின் பெயரால் மாணவர் அரிவாள் சம்மட்டியைக் கொடி எனக் கொள்வதானால் தோழர் அண்ணாதுரை கூறுவதுபோல் ஆரியத்தை அறுக்க அரிவாளும் வைதீகத்தை உடைக்கச் சம்மட்டியும் பயன்பட வேண்டுமென்று கூறி திராவிடமாணவர்களுக்குத் தனிக் கொடி வேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கி அதன்கீழ் மாணவர்கள் ஒற்றுமையுடன் உழைக்கக் கேட்டுக்கொண்டு கொடியேற்றுவித்தார்.

### பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து இரண்டு மணி நேரத்திற்கு மேல் சொற்பொழிவு ஆற்றினார்கள். (சொற்பொழிவு முதற்பக்கத்தில் வந்திருக்கிறது)

பின் வரவேற்புக்கழகத் தலைவர் மாணவத்தோழர் என். சண்முகம் அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

### ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ,

பின் தோழர் ஏ. பி. சனார்த்தனம் தம் தலைமையுரையில் வெளியார் தலைமையில் திராவிட மாணவ இயக்கம் வலிவுற்று வருகிறது என்றும், அகில இந்திய மாணவர் சம்மேளனமும், அகில இந்திய மாணவர் காங்கரசும் ஆரிய இயக்கமாய் மாணவருக்கு யாதொரு பயனும் இல்லாத முறையில் காங்கரசின் கைப்பாவையாய் உள்ளது என்றும் மாணவரிடை ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறோம், விடுதலைக்காகப் பாடுபடுகிறோம் என்று கூச்சல் போட்டுப் பயனில்லை என்றும் உண்மையில் ஒற்றுமைக்காக மக்களில் ஏற்றத் தாழ்வு நீங்க மக்கள் மக்களாய் வாழ விரும்புவது உழைப்பது திராவிட இயக்கம் என்றும் அதற்குத் தங்கள் லட்சியம் நாட்டுப் பிரிவினையே என்றும் எடுத்துக் கூறி மாணவ இயக்கம் ஓராண்டு குழந்தையாயினும் அது ஆற்றியுள்ள பெருந்தொண்டைக் கண்டு எதிரிகளும் கலங்குவதையும் கூறினார்.

### வழக்கறிஞர் டி. பி. வேதாச்சலம்

பின்பு தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரையாக சில பேசி விட்டு திருச்சி ஹரிஜன மாணவர் விடுதியிலிருந்து அண்மையில் 34 மாணவர்கள் நீக்கப்பட்டதைக் கண்டித்தும் மாணவர்களை ஆதிதிராவிடர் என்ற காரணத்தால் அதுவும் கல்லூரி மாணவர்களை அவர்கள் தன்மான உணர்ச்சிக்கு ஊறு செய்யும் முறையில் வார்டன் வேலை வாங்கியது தவறு என்றும் எடுத்துக்காட்டிப் பேசினார்.

### புலவர் வி. அ. அரங்கசாமி

பின் கரந்தைப் புலவர் தோழர் வி. அ. அரங்கசாமி அவர்கள் மாணவர்களிடை இளம் வயதிலேயே பகுத்தறிவைக் கெடுக்கப் புகுத்தப்படும் போதனைகளைக் கண்டித்தும், புராணங்களை ஆசிரியர்கள் கற்பிக்கும் பொழுது அதன் கண் உள்ள கற்பனைகளை விளக்கி அறிவுக் கண் கொண்டு அவைகளை நோக்கித் தக்க முறையில் பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றும் மாணவரிடையே தன்மான உணர்ச்சி அதிகரித்தல் அவசியம் என்றும் பேசினார்கள். பின் மாநாடு மாலைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### பிற்பகல் பகுதி

பிற்பகல் 2-30 மணிக்கு மாநாடு மீண்டும் கூடி. சில முக்கியமான தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றின. (தீர்மானங்கள் அடுத்த இதழில்)

பின் தோழர் மு. கருணாநிதி அவர்கள் "நாட்டு நிலையில் நாம்" என்பது பற்றி சிறிது நேரம் பேசினார்.

தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் மாணவர்கள் அரசியலில் கலக்கலாமா கூடாதா என்ற பிரச்சினையைப் பற்றி கவலையில்லை சமுதாயத்திலே நமக்குள்ள இழிவைப் போக்க பெரியாரவர்கள் பல வகை முறைகளைக் கையாண்டு விட்டார்கள்; அவர்கள் காலத்திற்குள் இவை நீக்கப்படாவிடின் இளம் மாணவர்கள் பொறுமையை இழக்க நேரும் என்று எச்சரிக்கை செய்து கால வேகத்தை உணர்ந்து தலைவர்கள் நடந்துகொள்வது தான் புத்திசாலித்தனமென்று கூறி மாணவர்கள் பிரசாரத்திற்குத் தயாராக வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பின் தோழர்கள் மாணவி சிவபாக்கியம், டி. கே. சீனிவாசன், குழந்தையா, எழில்இலவன், பொன்னன் ஆகியோர் பேசிய பின் செயலாளர் நன்றிகூறலுடன் மாநாடு முடிவடைந்தது.

### திராவிட மாணவர் ஆலோசனைக் குழுவின் கூட்டம்

மாலை 6-மணிக்கு திருச்சி காப்மையார் திராவிடர் கழகத்தில் திராவிட மாணவர் ஆலோசனைக் குழு கூடியது. தோழர் ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ., தலைமை வகித்தார். சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பின் தோழர் எஸ். தவமணி இராசன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

### ஆலோசனைக் குழுவில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. மாகாண மாநாட்டை சென்னையில் பள்ளிகள் திறந்த ஒரு திங்களுக்குள் நடத்துவது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பெரியார் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

### அதிகாரப்பட்டியில் பொதுக்கூட்டம்

10-2-45 மாலை 6-மணிக்கு அதிகாரப்பட்டியில் .காட்டாண்மைக்காரர் தி.க. சபாபதி கவுண்டர் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் செட்டியண்ணன், அங்கண்ணன், வேணு, ஈ. வெ. கி. சம்பத், பெரியார் ஈ. வெ. ராமசாமி முதலியோர்கள் பேசினார்கள். பெரியார் அவர்கள் 3மணி நேரத்திற்குமேலாக கிராம மக்களுக்கு எளிதில்புரியும்படியாக சமுகஊழல்களையும், பார்ப்பனீயத்தின் கொடுமைகளையும்திராவிடநாட்டின் பிரிவினைத்திட்டத்தையும் விளக்கிப் பேசினார், பின் இரவு 10 மணிக்கு கூட்டம் வந்தனத்துடன் முடிவுற்றது.

### பெண்ணாகரத்தில் பொதுக் கூட்டம்

11-2-45 மாலை 6 மணிக்கு பெண்ணாகரத்தில் தோழர் நஞ்சய்யா அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பொன்னுசாமி, நடேசன், ஜெயசீலன், ஈ. வெ. கி. சம்பத் முதலியோர் பேசிய பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 3 மணி நேரத்திற்கு மேலாகவே சொற்பொழிவாற்றினார், 10 மணிக்கு கூட்டம் இனிது முடிவுபெற்றது.

### பாப்பாரப்பட்டியில் கூட்டம்

12-2-45 மாலை 6-30 மணிக்கு தோழர் நடேசன் அவர்கள் தலைமையில் பாப்பாரப்பட்டியில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நஞ்சய்யா, சம்பத் முதலியோர் பேசிய பின் பெரியார் அவர்கள் அரசியல், சமுதாய சீர்திருத்தம், சன்மார்க்க சங்கத்தாரின் சூழ்ச்சிகள் முதலியவைகளைப் பற்றி 3 மணி நேரத்திற்கு மேலாகப்பேசினார், இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது முடிவுபெற்றது.

### காவேரிப்பட்டணத்தில் மாணவர் கூட்டம்

14-2-45 மாலை 5மணிக்கு காவேரிப்பட்டணம் போர்டு உயர் நிலைப் பள்ளியில் மாணவர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் "மேல்நாடும் கீழ்நாடும்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார், தலைவர் முடிவுரைக்குப்பின் அங்கிருந்தே மாணவர்கள் புடைசூழ, நூற்றுக்கணக்கான பொதுமக்களுடன் பெரியாரை சாரட் வண்டியில் அமர்த்தி ஊர்வலம் நடைபெற்றது. வழிநெடுக மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஆற்றோரக்கரையில் தோழர் கே. ஜி. கோவிந்தராஜ் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் சம்பத் அவர்கள் பேசியபின் பெரியார் அவர்கள் தற்கால அரசியல் நிலை, சமுதாய சீர்திருத்தம், திராவிடநாட்டுப் பிரிவினை முதலியவற்றை விளக்கி 3-மணிநேரம் பேசியபின் தலைவர் வந்தனத்துடன் கூட்டம் முடிந்தது.

* *

15-2-45 மாலை 5 மணிக்கு சேலம் கல்லூரியில் பிரின்ஸிபால் ராமசாமிக் கவுண்டர் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் பெரியார் அவர்கள் திராவிடநாட்டுப் பிரிவினை பற்றி விளக்கி பேசினார். வந்தனத்துடன் கூட்டம் முடிந்தது.


## திராவிடப் பதிப்பக படங்கள்

| | |
|---|---|
| நமது தலைவர் பெரியார் | 0—1—0 |
| தளபதி அண்ணாதுரை | 0—1—0 |
| தோழர். ஸ்டாலின் | 0—1—0 |
| இளங்கோடி. நெடுஞ்செழியன் | 0—1—0 |
| டாக்டர் தெனார்தனம் | 0—1—0 |
| தோழர். அன்பழகன் | 0—1—0 |
| தோழர். அம்பேத்கார் | 0—2—0 |
| தோழர். ராமநாதன் | 0—2—0 |
| அழகிய கலரில் நமது பெரியாரின் உருவம் அமைந்த பேட்ஜ் | 0—1—0 |
| (1) நம் பெரியார் வாழ்க! (2) திராவிடநாடு திராவிடருக்கே! என்னும் அச்சில் பொறிக்கப்பட்ட ரப்பர் ஸ்டாம்பு ஒன்றின் விலை | 1—4—0 |

நமது இயக்க ஏஜண்டு பத்திரிகை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். நல்ல கமிஷனுண்டு.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்குபசார், வேலூர். (N. A.)


### குடவாசலில் சர் செல்வம் நாள்

குடவாசல் திராவிடர் கழகத்தில் 2-3-45 தேதி மாலை 5 மணிக்கு, குடவாசல் திருக்குளம் தென் கரையில் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் நினைவு நாள் கொண்டாடப்பெறும். தோழர்கள் மேரி அடைக்கலமேமன் செல்லத்தம்மாள், குடந்தை எஸ். நவமணிராசன், முத்துவேல், கே. கே. நீலமேகம், மு. கருணாநிதி முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

2. குடந்தை திராவிட மாணவர் கழக சட்டதிட்டங்களை (படிக்கப்பட்டு) இக்குழு நம் மாணவ இயக்கத் திட்டங்களாக ஏற்றுக்கொண்டது.

3. ஒரு தனி மாணவக் கொடி ஆக்கப்பட்டது.

4. மாணவ இயக்கத்திற்கு ஒரு மாதப் பத்திரிகை நடத்த ஆவன செய்யவேண்டியது.

### கோபி திராவிடர் கழகம்

14-2-45-ந் தேதி கோபி ஏ. சி. ஆர். மண்டியில் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ஷை கழக கமிட்டிக் கூட்டத்தில், 'திராவிடர் கழக முதலாவது ஆண்டு விழா'வை மார்ச்சு மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும், ஷை விழாவிற்குத் தலைமை வகிக்கவும், சொற்பொழிவாற்றவும், கொடியேற்றவும் தோழர்கள் எஸ். ராமநாதன், எம். ஏ., பி. எல்., ஜனார்த்தனம், மீனாட்சி அம்மாள், கே. அன்பழகன், தாமரைக்கண்ணியம்மாள், அர்ச்சனன் ஆகியவர்களை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது என ஷை கழகக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## மகாமகத்தின் வரலாறு

"ஆதிகாலத்தில் உலகப்பிரளயம் நேரிடுவதற்கு முன்பு, பிரமதேவர் அப்பிரளயத்தினால் சகல சிருஷ்டிகளும் அழிந்து போகக்கூடிய நிலைமையைக் குறித்துக் கவலையுற்று, அதைத் தவிர்க்கக் கருதி, கைலாசநாதனான சிவபெருமானைக் குறித்துத் துதித்தார். அவரும் பிரமதேவனின் வேண்டுகோளுக்கிணங்கி, அவ்வித அழிவை நிவர்த்திக்கும் பொருட்டு, சிருஷ்டி பீஜத்தை அமிர்தத்துடன் கலந்து அமர்தம் நிறைந்த ஒரு குடத்திற்குள் வைத்து, குடத்தைத் தேங்காய், மாவிலை, வில்வம், பூணூல் இவைகளால் அலங்கரித்து மூடி, மகா பிரளயத்தில் விட்டு விடும்படிப் பிரமதேவரிடம் சொன்னார். அவ்வாறே பிரமதேவரும் பிரளய காலத்தில் அந்த அமிர்தக் குடத்தை மிதக்கவிட்டதாகவும், அக்கும்பம் இந்த க்ஷேத்திரத்தில் மிதந்துவந்து தங்கலுற்றதாகவும், பிரளய முடிவில் பிரமதேவர் முதலியோர் அக்குடத்தைக் கண்டு, மறுமுறை சிவபிரானைத் துதிக்கவும், அவர் அச்சமயம் வேடரூபத்துடன் பிரசன்னமாகி, ஓர் பாணத்தை எய்து, அவ்வமிர்த கும்பத்தை உடைக்கவே, அதனுள்ளிருந்த அமிர்தம் இப்பிரதேசத்தில் பரவியது பற்றி இக்ஷேத்திரத்திற்குக் 'கும்பகோணம்' எனப்பெயர் வழங்கலாயிற்றென்பது புராண வரலாறு. அக்குடத்தினின்றும் வெளிப்பட்ட அமிர்தமானது இரு கூபங்களாக (கிணறுகள்) தங்கலாற்று. அவைகளில் ஒன்று "மஹாமகக்குளம்" என்றும் மற்றொன்று "ஹேமபுஷ்கரணி" (பொற்றாமரை) என்றும் வழங்கப் பெற்று வருகின்றன.

முன்பு விவரித்தபடி சிவபெருமானால் உடைக்கப்பட்ட குடத்தின் பாகங்கள் அதிலிருந்த அமிர்தத்தைக் கொண்டே பிசைவப் பெற்று, ஓர் லிங்க பூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பூஜிக்கப்பட்டதாகவும் அவரே "கும்பேஸ்வரர்" என்றும் வழங்கப் பெற்றதாகவும் புராணம் சொல்லுகிறது.

அமிர்த குடத்தின் மேல் மூடப்பட்ட அலங்கார சாமான்களான தேங்காய், மாவிலை, வில்வம், பூணூல் முதலியவைகள் முறையே இப்பிரதேசத்தைச் சுற்றி பாவி எழுந்து அவைகள் யாவும் அங்கங்கே சிவக்ஷேத்திரங்களாக ஏற்பட்டு, பூஜார்ஹமாக விளங்கி வருகின்றன.

இந்நகரம் முக்கிய சிவக்ஷேத்திரமாக இருப்பதுமன்றி முக்கிய விஷ்ணு க்ஷேத்திரமாகவும், புண்ணிய தீர்த்தங்களையுடையதாகவும் தொன்றுதொட்டு விளங்கிக் கொண்டாடப்பட்டு வருகிறது"

குறிப்பு:- இது "சுதேசமித்திரன்" 19-2-45-ந் தேதி இதழில் காணப்படுகிறது. இதைக் கண்ணுறும் எவரும் இது எவ்வளவு ஆபாசக் "களஞ்சியம்" என்பதையும் இதையும் இந்த 20-வது நூற்றாண்டில் நம் மக்கள் நம்பி வருகிறார்களே! என்றும் எவர்தான் வருந்தாமல் இருக்க முடியும். இவ்வளவுகூட பகுத்தறிவு இல்லாத மக்கள் அடிமையாயிருப்பதில் ஆச்சரியமென்ன?

ஆ-ர்.

1945-ஆம் ஆண்டு
யுத்தத்தின் தோற்றம்

★

பெரும்போர்கள்
மகத்தான இரத்தவெள்ளம்
எண்ணற்ற போர்க்கைதிகள்

★

எனவே,
செஞ்சிலுவை சங்கம், எப்பொழுதையும்விட
உங்கள் உதவியை நாடுகிறது.

"செஞ்சிலுவை"
என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு

உடனே பணம்கொடுத்துதவுங்கள்

## திருச்சி பீமநகர் திராவிட இளைஞர் கழகம்

### மாணவர் போட்டி முடிவு

முதற் பரிசு: தமிழ் ஒளி C/o பாரதிதாசன், புதுவை.

2-ஆம் பரிசு: இளங்கோவன், முதல் வகுப்பு நகராண்மைக் கழக கல்லூரி, சேலம்.

3-ஆம் பரிசு: கூ. ரா. வெங்கடாசலம், ஆறாம்பாரம், பின்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1945 ௵ பிப்ரவரி ௴ 24உ

# தமிழ்நாடு மாணவர் நிலை

நம் நாட்டில் சிறிதுகாலமாய் திராவிட மாணவர்களிடை ஒரு எழுச்சி ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அது பெரிதும் தங்கள் நாட்டைப்பற்றியும் தங்கள் இனத்தைப்பற்றியுமேயாகும்.

இதுவரை தமிழ்நாட்டு மாணவர்களுக்காவது தமிழ்நாட்டில் உள்ள கற்றோர்கள் என்பவர்களுக்காவது தமிழ்நாட்டைப்பற்றியோ தமிழர் இனத்தைப்பற்றியோ ஒரு உணர்ச்சியோ பற்றுதலோ இருந்ததாகக் கூறுவதற்கு குறிப்பிடத்தகுந்த ஆதாரம் காட்டமுடியாது என்றே சொல்லலாம். ஏனெனில் ஆங்கிலம் படித்தவர்களுக்கு அர்த்தமற்றதும் உத்தியோகத்துக்கும் பதவிக்கும் ஏற்றதான அரசியலே அவர்கள் லட்சியமாக இருந்துவந்திருக்கிறது. தமிழ் படித்தவர்களுக்கு சமயமும் சமய ஆதாரங்களில் பண்டித பெருமையுமே லட்சியமாக இருந்து வந்திருக்கிறது. இதனால் எவருக்கும் நாட்டைப்பற்றியும் இனத்தைப்பற்றியும் கவலை ஏற்பட இடம் இல்லாமல் போய்விட்டது. மாணவர்களுக்குஎன்றாலோ மாணவர்களுக்கு அரசியல் கூப்பாடும் அரசியல் ஞானங்களும் அணியாக ஆக்கப்பட்டுவிட்டதால் அவர்கள் நான்கு எழுத்து கூட்டிப் படிக்கத் தெரிந்த உடன் தேசீயத்தைப் பேசிக்கொண்டிருப்பதே நாகரீகமாய்க் கருதிவந்தார்கள். இப்படிப்பட்ட கெட்ட காரியம் பொருந்திய நாட்டில் இன்று மாணவர்களிடை தோன்றியுள்ள நாட்டுணர்ச்சியும் இன உணர்ச்சியும் காண்பது மிகுதியும் மிகுதியும் மகிழ்ச்சி அடையத்தக்க வாய்ப்பேயாகும்.

இதைக் கண்ட எதிரிகளும் அறிவிலிகளும், பொறாமைக்காரர்களும், விபீஷணர்களும் குறைகூறுவதும் வீண் கூச்சல் கிளப்பி பொய் அழுகை அழுவதும் நமக்கு அதிசயமில்லை. பிள்ளைகளிடத்தில் மகா பற்றுள்ளவர்கள் போல காட்டிக்கொண்டு "படிக்கிற காலத்தில் பிள்ளைகளுக்கு வேறு காரியத்தில் கவனம் செலுத்தச் செய்யலாமா?" என்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

எதற்கு ஆகப் படிப்பது என்கின்ற லட்சியம் இல்லாமல் படிப்பது அறிவுடைமையாகுமா என்று சிந்திக்க விரும்புகிறோம்.

படிக்கிறவர்களிடம் மக்கள் காட்டும் அனுதாபமெல்லாம் படித்தால் தானே உத்தியோகம் பெறலாம் என்கின்ற ஒரு காரியத்திற்கல்லாமல் வேறு எதற்கு என்று யாராவதுசொல்ல முடியுமா என்று கேட்கிறோம்.

உத்தியோகம் எதற்கு ஆக என்றால் பணம் சம்பாதிப்பதற்கு ஆக என்பதல்லாமல், வேறு எதற்குப் பயன்படுகிறது என்று யாராவது பெருவாரியான ஆதாரத்தோடு எடுத்துக்கூற முடியுமா என்று கேட்கின்றோம்.

உத்தியோகம் பெறுவதும் பணம் சம்பாதிப்பதுமே மனிதனின் இலட்சியமாக ஆகி மக்களெல்லாம் இதற்காகவே படிக்க வேண்டும் என்று ஆகிவிட்டால், தமிழ் மகனுக்கு இருக்கிற சூத்திரப் பட்டமும், இழிஜாதிப் பட்டமும், தீண்டாமை நிலையும், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் இருக்கும் ஜாதி, மதம், கோவில், குளம், சாமி, சடங்கு ஆகியவைகள் ஒழிக்கப்பட வேறு எங்கிருந்து யார் வருவார்கள் என்று இந்த அறிவும், மானமும் பற்றிய கவலை இல்லாத அனுதாபக்காரர்கள் கருதுகிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை.

தமிழனுக்கு உத்தியோகம் வேண்டுமானால் படிப்பு தான் இன்று தடையாய் இருக்கிறதா என்று கேட்கின்றோம். முஸ்லீம்கள் 100-க்கு 9 பேர்கள், 100-க்கு 10, 12 விகிதம் உத்தியோகம் பெற்று இருக்கிறார்களே எப்படிப் பெற்றார்கள்? கிறிஸ்தவர்கள் 100-க்கு 3 பேர்கள், 100-க்கு 6, 7 விகிதம் உத்தியோகம் பெற்று இருக்கிறார்களே எப்படிப்பெற்றார்கள்? பார்ப்பனர்கள் 100-க்கு 3 பேர், 100-க்கு 40, 50, 70 விகிதம் உத்தியோகம் பெற்றார்களே எப்படிப் பெற்றார்கள்? இவற்றிற்கு படிப்பு காரணமா?, மான உணர்ச்சியும், இன உணர்ச்சியும் காரணமா?, என்று கேட்கிறோம்.

அப்படித்தான் உத்தியோகம் பெறுவதானாலும் மானக் கவலையும், இனக் கவலையும் இல்லாமல் தன்தன் சுயநலக் கவலையும், இனக்கொலைக் கவலையும் உள்ள உத்தியோகத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன என்று கேட்கிறோம். இன உணர்ச்சி, நாட்டு உணர்ச்சி ஒரு மாணவனுக்கு ஏற்படுத்தினாலேயே படிக்க முடியாமல் போய்விடும் என்று சொல்லிவிட முடியாது.

பார்ப்பனர்களுக்கு இனஉணர்ச்சியும், மற்ற இனங்களைத் தலை எடுக்கவொட்டாமல் அழுத்தும் முயற்சியும், பூணூல் கல்யாண காலத்திலிருந்தே ஊட்டப்பட்டுவருகிறதை யார் மறுக்கமுடியும். அப்படி இருந்தும் பார்ப்பன மாணவன் படிக்கவில்லையா? அதுபோல் பிள்ளைகளுக்கு கவலை இருந்தால் கவலை ஏற்படும்படியான உணர்ச்சி ஊட்டப்பட்டால் படிப்பு இல்லாமல் போய்விடாது.

இந்த சமயத்தில் தேசீயவாதிகள் என்பவர்களும் மாணவர்களுக்கு புத்திசொல்ல வந்துவிட்டார்கள். "மாணவர்கள் படிக்கும்போது வேறுகாரியங்களில் புத்திசெலுத்தக் கூடாது" என்கிறார்கள். தோழர்கள் டாக்டர் டி. எஸ். எஸ். ராசன், சரோஜனி அம்மையார், காந்தியார், டாக்டர் ஆச்சாரியார் ஆகியவர்கள் கூற வந்துவிட்டார்கள். இவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில் மாணவர்களை பள்ளியைவிட்டு வெளியில் வரும்படியாக அழைத்தவர்கள் என்பது யாருக்குத் தெரியாது?

இன்றும் மாணவர்களை பயன்படுத்தி தங்கள் நலனைப் பெருக்கிக்கொள்ளுகிறார்கள் என்பது யாருக்குத் தெரியாது? இப்போது இவர்களுக்கு இந்த ஞானோதயம் எதற்கு ஆக வந்தது என்பது நமக்குப் புரியவில்லை. ஆதலால் மாணவர்கள் தன் நாடு, தன் இனம் பற்றிய நலனில் கவலை செலுத்துவது எப்படியும் குற்றமாக ஆகிவிடாது. இதுவரை மாணவர்கள் செலுத்திவந்த

ரோஜா முத்தையா

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)
## 24-2-45ந் தேதி வரை 28878 அங்கத்தினர்கள் ரூ. 2863—12—0 சந்தா

பிப்ரவரி மாதம் 24ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 4843 | 9. வட ஆற்காடு | 1528 |
| 2. தஞ்சை | 4776 | 10. மதுரை | 1298 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 586 |
| 4. திருச்சி | 3801 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 1930 | 13. இலங்கை | 165 |
| 6. திருநெல்வேலி | 1886 | 14 பெங்களூர் | 158 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென் ஆற்காடு | 1617 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 28878. சந்தா ரூ. 2863-12-0.

நாட்டுணர்ச்சியும் இன உணர்ச்சியும் ஆரிய நாட்டிற்கும் ஆரிய இனத்திற்குமே பயன்பட்டு வந்தது. அதைத்தான் இப்போது தமிழ் நாட்டிற்கும் தமிழர் இனத்திற்கும் பயன் படத் திருப்ப வேண்டுமென்கின்றோமே ஒழிய புதிய துவக்கம் ஒன்றும் இல்லை.

அன்றியும் மாணவர்களை ஓய்வில் பிரசாரம் செய்யவேண்டும் என்கின்றோம். ஏனெனில் ஆரியர்கள் நலனுக்கு ஆரியர்களுக்கு இருப்பதுபோல் தமிழர்களுக்கு பிரசாரத்திற்கு மக்களோ, பத்திரிக்கையோ, உணர்ச்சியோ சரியான படி இல்லை.

ஆரியர்கள் உத்தியோகஸ்தர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், பத்திராதிபர்கள், ஓட்டல்காரர்கள், ஆசிரியர்கள், காங்கரஸ் பிரமுகர்கள் முதலிய யாவரும் ஆரியப் பிரசாரகர்களே யாவார்கள். அப்படிப்போல் தமிழர்களில் யார் இருக்கிறார்கள்? பத்திரிக்கைக்காரர்கள் பெரிதும் கூழுக்குப் பாடுபடுகிறவர்கள். ஆசிரியர்கள் முக்காலும் கஞ்சிக்குப் பாடுபடுகிறவர்கள். வக்கீல்கள் கவலையே அற்றவர்கள். இயக்கப் பிரமுகர்கள் கூலி கொடுத்து இயக்கத்தை ஒழிக்க முயன்று முன்னேறப் பார்ப்பவர்கள். இப்படிப்பட்ட மக்களைக் கொண்ட சமுதாயத்திற்கு மாணவர்கள் தங்களாலான உதவி செய்யவந்தால் அதில் பொறாமையோ, ஆத்திரமோ காட்டுவது எவ்வளவு கேவலமான காரியமாகும் என்பதை பொதுமக்கள்தான் முடிவுசெய்யவேண்டும்?

ஆகவே இன்றைய தமிழ் (திராவிட) மாணவர்கள் தங்கள் படிப்பைக் காட்டிலும் தங்கள் நாட்டினுடையவும், இனத்தினுடையவும் விடுதலையும் மேன்மையும் சிறந்தது என்பதை சிந்தனையில் வைத்து தற்காலம் அவர்களுக்குள் எழுந்திருக்கும் உணர்ச்சியை பயன்படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

வேறு ஒருவர் தங்களுக்குஆக தங்கள் பிற்கால வாழ்வுக்குஆக பாடுபடுவார்கள் என்று எண்ணி ஏமாறவேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்கின்றோம். ஏனெனில் வேறு யார் இருக்கிறார்கள் என்று கருதி தங்களுக்குத் தெரிந்த ஒவ்வொருவருடைய யோக்கியதையையும் அவர்களது முன்பின் நடத்தையையும் சிந்தித்துப் பார்த்தால் தெரியும்.

அடுத்தாற்போல் வரும் கோடைகால விடுமுறையில் மாணவர்கள் சிறந்ததொரு பிரசாரம் செய்யத் தயாராய் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பலர் பலவிதமாகச் சொல்வதற்கு காதுகொடுத்து மனம் மாறி விடக்கூடாது என்றும், உங்களுக்குப் புத்தி சொல்லுகின்றவர்கள் தன்மையையும் அவர்கள் நிலைமையையும் நடுநிலையில் இருந்து சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்குவாருங்கள் என்றும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## பெரியார் ஈ. வெ. ரா.

### சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பேசும்போது நாக்கு பற்களுக்கு இடையில்சிக்கி கடிக்கப்பட்டு காயமாகி, அது சிறிது தொல்லை கொடுக்கும்படியான புண்ணாக ஆகிவிட்டதால், அதை சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் காட்டியதில் அது சிறிது அபாயமானதென்றும் மின்சார எக்ஸ்ரே சிகிச்சை 10 நாள்களுக்காவது நடக்கவேண்டும் என்றும், போலி பல் வைத்துக் கொண்டிருப்பதை உடனே எடுத்துவிட்டு புண் முழு சவுக்கியம் ஆன பிறகே வேறு பல் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி எக்ஸ்ரே சிகிச்சை செய்யப்பட்டு வருகிறார். குறைந்தது ஒரு வாரம் அல்லது 10 நாள்களுக்கு சென்னையில் இருக்க வேண்டியதாக இருக்கும் என்பதாகத் தெரிகிறது.

## அன்பழகன் — வெற்றிச்செல்வி திருமணம்

தோழர்கள் க. அன்பழகன் பி. ஏ., (ஹானர்ஸ்) அவர்களுக்கும் வெற்றிச்செல்விக்கும் 21-2-45-ந் தேதிகாலை சென்னையில்பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் திருமணம் நடந்தது. தலைவர் முன்னுரைக்குப்பின், புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள், சென்னைத் திராவிட மாணவர்கள், தோழர் மு. குழந்தவேல், அண்ணாமலைப் பல்கலைக்கழக திராவிட மாணவர்கள், தஞ்சை புலவர் கோ. சி. பெரியசாமி ஆகியவர்களால் அளிக்கப்பட்ட வாழ்த்திதழ்கள் வாசித்து அளிக்கப்பட்டன. பின் மணமக்களை வாழ்த்தி அனுப்ப

பட்ட வாழ்த்துச்செய்திகள் வாசிக்கப்பட்டன. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் சென்னை மேயர் எஸ். ராதா கிருஷ்ண பிள்ளை, எஸ். ராம நாதன், எம். ஏ., பி. எல்., இரா. நெடுஞ்செழியன், மதியழகன், நா.மு. மாணிக்கம், சி. என். அண்ணாதுரை, டி. ஷண்முகம், எஸ். குருசாமி, திராவிடமணி, பி. ஜனார்த்தனம், ஈ. வி. கே. சம்பத், முதலியவர்கள் பேசியபின், மணமகன் தோழர் க. அன்பழகன் நன்றி கூறலுடன் திருமணம் முடிவுற்றது.

## தண்டையார்பேட்டை திராவிடர் கழகம்

தண்டையார்பேட்டை, சேணியம்மன் கோவில் மைதானத்தில் 25-2-45-ந் தேதி மாலை 6 மணிக்கு தோழர் சி. பார்த்தசாரதி நாயகரவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்.

"திராவிடரும் எதிர்காலமும்" என்பது பற்றி தோழர்கள் என். ஜீவரத்தினம், கே. அன்பழகன், ஏ. பி. ஜனார்த்தனம் ஆகியோர்கள் பேசுவார்கள்.

## சென்னை நாடார் முன்னேற்ற இளைஞர் கழகம்

சென்னை வண்ணை பம்பதி (ராபின்சன் பார்க் அருகில்) நல லட்சுமி பாடசாலையில் சந்தச் சரபக்கவி ச. சு. சங்கரலிங்கக் கவிராயர், தோழர் எஸ். சம்பந்தம் ஆகியவர்களின் பிரிவுபசாரக் கூட்டம் 25-2-45-ந் தேதி மாலை 5 மணிக்கு தோழர் டி. வி. கணபதி நாடார் தலைமையில் நடைபெறும்.

## திருமணம்

சென்னை "தமிழ் உலக" ஆசிரியர் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்களின் மகள் தோழர் டி. பி. ராஜேஸ்வரிக்கும் தோழர் எம். சுப்பிரமணிய முதலியார் மகன் தோழர் எம். முத்துக்குமாரசாமிக்கும் 229, லிங்கிசெட்டித் தெருவில் மார்ச்சு முதல் நாளன்று திருமணம் நடைபெறும்.

ரோஜா முத்தையா

## சென்னையில்!

31-3-45 சனி மாலை 6-30-மணிக்கு, செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் கணபதி அண்ணாதுரை அவர்களும் திராவிட நடிகர் கழகத் தோழர்களும் நடிக்கும் சிவாஜி அல்லது இந்து ராஜ்யம் நாடகம் நடைபெறும்.

கட்டணங்கள்:

ரூ: 5, 2-4, 1-2, அணா 9.

1-4-45 ஞாயிறு காலை 10-மணிக்கு செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் சென்னை மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாடு திருச்சி முனிசிபல் கவுன்சிலர் தோழர் என். சங்கரன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

2-4-45 திங்கள் மாலை 5-30 மணிக்கு இந்தி எதிர்ப்புப் போரில் சிறைசென்று உயிர்நீத்த வீரர்கள் நடராசன்—தாலமுத்து ஆகியவர்களின் ஞாபகார்த்தக் கட்டிட திறப்பு விழா, சென்னை மூலகொத்தளம் மயான மைதானத்தில் நடைபெறும்.

நாடக டிக்கட்டுகள் 1-3-45-ந் தேதியிலிருந்து சென்னையின் பல பாகங்களிலுமுள்ள முக்கிய தோழர்களிடம் கிடைக்கும். முழு விபரங்கள் அடுத்த அறிக்கையில்.

பொதுக் காரியதரிசி,
சென்னை நகர திராவிடர் கழகம்.

## "பலிபீடம்"

விருதை தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய "பலிபீடம்" என்ற சீர்திருத்த நாடகம், தோழர் எம். ஆர். ராதா அவர்களின் "திராவிட புதுமலர்ச்சி நாடக சபா"வின் கூடிய விரைவில் விருதுநகரில் நடைபெறும்.

மேற்படி "பலிபீடம்" நாடகத்தில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியும், தோழர் எம். ஆர். ராதாவும், அவர்கள் சபையின் நடிகர்களும் நடிப்பார்கள்.

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக் கழக இலக்கிய மன்றத்தில் 14-12-44-ஆம் தேதி தோழர் அ. சிதம்பரநாதஞ்செட்டியார் M. A., Ph. D. தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) கலையும், வாழ்வும் என்பது பற்றிப் பேசினார்.

## சென்னையில் நடனக்கச்சேரி

சென்னை இராயபுரம் 2-வது வட்டம் திராவிடர்கழக நிதிசேமிப்பிற்காக, 3-3-45 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் பேபி ரஷ்யா—நடனக் கச்சேரி, கோவை கெ. எஸ். முத்தையா பாகவதர் இன்னிசையுடனும் தக்கபக்க மேளங்களுடனும் நடைபெறும்.

டிக்கட்டுகள் ரூ. 5, 3, 2, 1. அணா. 8.

**மதிப்புரைகள்:**

## எது இசை?

சென்னை கமலா பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்ட "எது இசை!" என்ற நூல் வரப்பெற்றோம். கிரவுன் 1x8 அளவில் 48 பக்கங்கள் கொண்டது. தமிழிசை இயக்கம்பற்றி எதிரிகள் பற்பலவாறு திருத்திக்கூறிவரும் இந்நாளில் எது இசை என்பதை மக்கள் அறிந்துகொள்ள ஆசைப்படுவது இயல்பு. இதனை யறிந்துகொள்ள தக்க நூல் இதுவரை இல்லாதிருந்தது. இக்குறையை இந்நூல் ஓரளவுக்கு தீர்த்துவிட்டதென்றே சொல்லலாம். தமிழிசையியக்கம் பற்றி "தமிழரின் மறுமலர்ச்சி!" என்ற தலைப்பில் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தீட்டியுள்ள அழகிய கட்டுரையும், ராஜா சர், சர். ஆர். கே. எஸ்., சி. ஆர். ஆகியவர்களின் பேச்சுக்களும் தமிழிசை இயக்கம் பற்றிய ஐயங்களை நீக்கி விளக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை.

"எது இசை!" என்பது பற்றி புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தீட்டியுள்ள கருத்து இசைத்துறையில் மக்கள் மனத்தில் புரட்சியை உண்டுபண்ணும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இன்று நாட்டிலே தமிழிசை இயக்கம் என்ற பெயரால் நடக்கும் கிளர்ச்சியின் நோக்கத்தை உயிர்க்கவி நன்கு சித்தரித்திருக்கிறார். இதற்காகவாவது இந்நூலை ஒவ்வொருவரும் வாசிப்படிக்கவேண்டுமென விரும்புகிறோம். விலை அணா. 12.

## நமது புரட்சிக்கவிக்கு பணமுடிப்பு

தற்பொழுது நாட்டில் இருக்கின்ற கவிஞர்களுக்கும், மறைந்த கவிஞரின் குடும்பத்தினருக்கும் அவர்கள் பால் பற்று கொண்ட மக்கள் பணமுடிப்பு கொடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. அதுபோல் புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களுக்கும் நாஞ்சில்நாட்டு அபிமானிகளாகிய நாங்கள் அவரின் பிறந்த தினமாகிய ஏப்ரல் 17-ம் நாள் ஒரு பணமுடிப்பு கொடுக்கக் கருதி அதற்கான வசூலும் செய்து வருகின்றோம். இந்த நாஞ்சில் மக்கள் அனைவரும் தங்களாலியன்ற அளவு பொருளுதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இதுபோன்று ஒவ்வொரு ஊர்த் தோழர்களும் கவிஞருக்கு பணமுடிப்புக் கொடுக்க பெரிதும் விழைகின்றோம்.

இங்ஙனம்,
கவி பாரதிதாசன் நிதி வசூல் கமிட்டி,
கோட்டாறு, திருவாங்கூர்.

## கல்லிடைக்குறிச்சி திராவிடர் கழகம்

ஷை கழகத்தின் திறப்பு விழா 4-3-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு ஷை கழகக் கட்டிடத்தில் நடைபெறும். அது சமயம் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

## “திராவிடநாடு”

25-2-45-ல் முதல் ‘திராவிடநாடு’ வழக்கம்போல் வெளிவிடப்படும் என்பதை ஏஜண்டுத்தோழர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
மானேஜர், ‘திராவிடநாடு’.
20-2-45 காஞ்சீபுரம்.

## மறைவு

கரூர் தாலுக்கா மேலப்பாளையம் திராவிடக் கழக இயக்கத் தோழரும், மேற்படி கழகத்தைத் தோற்றுவித்தவருமான தோழர் க. வைரபுரி அவர்கள் தாயாரும், ஷை கழக வளர்ச்சிக்கு ஆதரவளித்தவருமான தோழர் முத்தம்மாள் 9-2-45-ல் வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு இயற்கையெய்தியது கேட்டு வருந்துகிறோம்.

## சர் செல்வம் நாள்

காலஞ்சென்ற தலைவர் சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களின் நினைவு நாளை வருகிற மார்ச்சு மாதம் 1-ஆந் தேதி முதல் 7-ஆந் தேதி வரை திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர் சேர்க்கும் வாரமாக திராவிட நாடெங்குமுள்ள கழகங்களும் பொது மக்களும் கொண்டாடுவார்களாக.

## யாரிங்கே?

சூத்திரன் ஆனது யாராலே?
சுதந்திரம் போனது எவராலே?
கோத்திரம்குலம் மதம் சாதியென்றே
கூட்டம் பிரித்தது யார்வேலை?
சாத்திரம் வேதம் இதிகாசம்
சமயநூல் புராணம் இவையேது?
ஆத்திரம் இன்றி அடிமைசெய்து
ஆட்சிபுரிபவர் ஆரிங்கே?
கண்ணில் தெரியாக் கடவுளுக்கே
கற்பனையாய்ப்பல கதைகட்டி,
மண்ணில் கல்லில் செம்பதனில்
வடிவம் பலவாய் உருவமைத்து,
விண்ணில் இடித்திடும் கோவிலுடன்
விமானம் முதலாய் ஏற்படுத்தி,
எண்ணிப்பார்க்கும் அறிவழித்து,
எய்த்துப்பிழைப்பவர் யாரிங்கே?
அரசியல் துறையில் அதிகாரி,
அறிவியல் துறைதனில் ஆசிரியர்,
உரிமைப்பொருளியல் முதலாளி,
உலகியல் வாழ்வில் தலைவர்கள்,
திறமிகு சமுதாயப் பூசாரர்,
தெய்வவணக்கத்தில் குருக்களுமாய்
அறமிகுந் திராவிட இனத்தவரை
அடக்கிய ஆள்பவர் ஆரிங்கே?

—குடந்தை ஆனந்தம்.

## கோயிலில் பார்ப்பனியம் ஒழிந்தது

ஓடாக்கல்லூர் காமன் கோயில் பண்டிகை ஆரம்பத்தில் காப்புக் கட்டுதல் என்ற முறையில் ஆண்டுதோறும் பார்ப்பனப் புரோகிதனை வரவழைத்து ஊரின் சார்பாக தட்சணை தானம் என மூட்டை கட்டிக் கொடுத்து அனுப்பும் பழக்கம் இவ்வாண்டு முதல் ஒழிந்துவிட்டது. வந்த பார்ப்பனன் வெறுங்கையுடன் யார் கண்ணிலும் படாமல் மறைந்து செல்லும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. வயோதிகர்களும் கூட பார்ப்பனத் தரகன் இல்லாமலேயே கடவுளைத் தொழலாம் என்ற முடிவுக்கு வந்தது வரவேற்கத் தக்க அறிகுறி. ஆகவே இனிமேல் இவ்வூர் கோயில்களில் பார்ப்பனன் புகமுடியாது. மற்றும் புராண ஆபாசத்தை நாடகமாக நடிக்கும் கெட்ட வழக்கமும் ஒழிந்தது. இம்முன்னேற்றத்திற்குக் காரணமான இவ்வூர் திராவிடர் கழகத்தார் முயற்சி பாராட்டத்தக்கது.

## ரயில்வே உத்தியோகத்தில் செடியூல் வகுப்பு

இரயில்வே கீழ்த்தர உத்தியோகங்களில் செடியூல் வகுப்பாருக்கு 8 1/3 சதவிகிதம் ஒதுக்கிவைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. அந்தந்த பகுதிகளில் உள்ள செடியூல் வகுப்பாரின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி விகிதாச்சாரம் குறிக்கப்பட்டிருக்கிறது. பி. பி. சி. ஐ. ரயில்வேயில் 5 சதவிகிதம், இ. ஐ. ரயில்வேயில் 12 சதவிகிதம்; ஜி. ஐ. பி. ரயில்வேயில் 10 சதவிகிதம்; பி. என். ரயில்வேயில் 10 சதவிகிதம், எம். எஸ். எம். ரயில்வேயில் 10 சதவிகிதம், எஸ். ஐ. ரயில்வேயில் 11 சதவிகிதம், ரயில்வே போர்டில் 8 1/3 விகிதமும் ஒதுக்கிவைக்கப்படவேண்டும்.

## சேலம் திருச்சி தேவேந்திர வாலிபர் சங்கம்

2-3-45 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு மோகனூர் கந்தசாமி இலவச வாசகசாலையில் மேற்படி சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கிறபடியால் ஒவ்வொரு தேவேந்திர வாலிப சங்கத்திலிருந்து தேர்ந்தெடுத்து ஷை தேதியில் கூட்டத்திற்கு ஆசர் ஆகவேணுமாய் கோருகிறேன்.

எம். பி. கந்தசாமி.

## கிழவன் கனவு

தீட்டியவர் மு. கருணாநிதி, (சிறு கற்பனை) விரைவில் வெளிவரும். விலை: 5 அணா.
வெளியிடுவோர்: சு. இராமநாதன், விஜயபுரம், திருவாரூர்.

21-12-44 தேதி தோழர் பி. கே. ஐயா தலைமையில் நடந்த கரூர் திராவிட கழககூட்டத்தில், தோழர் சி. பி. சின்னராசு, ‘பெரியாரும் திராவிடர் கழகமும்’ என்பதுபற்றி பேசினார்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

சேலம் செவ்வாய்ப்பேட்டை அரிசிபாளையம் திராவிடர் தெருவில் திராவிடர் வாசகசாலையொன்று நிறுவப்பட்டிருக்கிறது. அதற்குத் தோழர்கள் அல்லிமுத்து தலைவராகவும், கைலாசமலை காரியதரிசியாகவும், சிதம்பரம் உபதலைவராகவும், சந்தியான் பொக்கிஷதாரராகவும், தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

o o

கல்லிடைப்பதி இக்பால் இளைஞர் மன்றம் பொதுக்கூட்டம் 14-12-44 தேதி தோழர் கே. எம். செய்யது முஹம்மது தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் எ. முஹம்மது, கே. மூசைதீன் பிச்சை, எஸ். எஸ். லைதீன் ஆகியவர்கள் பேசினார்கள். மன்ற அறிக்கையை தோழர் டி.எம்.எ. மீரான் வாசித்தார். மணமகன் பி. பி. மீரானுக்கு மன்றசார்பில் வாழ்த்தி மலர்மாலை சூட்டப்பட்டது.

o o

திருச்சி மருத்துவர்கள் அமாவாசை பொதுக் கூட்டம் 15-12-44-ந் தேதி திருச்சி, வரகனேரி மேட்டுத் தெருவு சங்க நிலையத்தில் தோழர் செல்லையா மருத்துவர் தலைமையில் நடந்தது.

o o

ஈரோடு மருத்துவர் சங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் 15-12-44-ந் தேதி தோழர் என். என். வெங்கடாசலம் தலைமையில் நடந்தது. தோழர்கள் கே. பத்ரகாளி, எம். அங்கமுத்து, பி. பெருமாள், எம். ராமசாமி முதலியவர்கள் பேசினார்கள்.

o o

தனது திருமண வைபவத்தை முடித்துக்கொண்டு பம்பாய் வந்துள்ள பம்பாய் தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகத்தின் பொதுக் காரியதரிசியும், சிறந்த பொதுநல ஊழியருமான தோழர் கே. எஸ். பாலகிருஷ்ணன் அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதற்காக 3-12-44-ந் தேதி தோழர் என். டி. சவரிதாசன் தலைமையில் ஒரு உபசாரக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பாராட்டினார்கள். வாழ்த்துப் பத்திரம் ஒன்று அளிக்கப்பட்டது. பல தோழர்களால் சன்மானங்கள் வழங்கப்பட்டன. தேநீர் விருந்தும் நடைபெற்றது.

o o

சேலம் ஹோட்டல் ஜெனரல்பாடி கூட்டம் சேலம் வைஸ்யா விடுதி அசோசியேஷனில் 18-12-44-ஆம் தேதி தோழர் என். கே. சடகோப முதலியார் எம். எல். சி. தலைமையில் நடைபெற்றது.

o o

கடையநல்லூர் டவுன் ஐமோலியா முஸ்லிம் சங்கத்தின் 11 வது ஆண்டு விழா 6-12-44-ஆம் தேதி தென்காசி தோழர் மூ. ந. அப்துல் ரஹ்மான் சாஹிப் பகதூர் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஹாபீஸ், ஒ. எம். எஸ். அப்துல் காதர் சாஹிப், திருச்சி குதுபுதீன் சாஹிப் பாஜில் முதலியவர்கள் பேசினார்கள்.

ஷை சங்கத்திற்கு 11 வது வருடத்திற்கு தோழர்கள் கே. எஸ். சேக் மொய்தீன் சாஹிப் தலைவராகவும், உ. ப. ஹூசைன் சாஹிப் உபதலைவராகவும், முஹம்மது சித்தா சாஹிப் காரியதரிசியாகவும், க. இ. அப்துல் கரீம் சாஹிப் உபகாரியதரிசியாகவும், க. சி. மொஹைதீன் சாஹிப் பொக்கிஷதாரராகவும், 12 பேர் கமிட்டி மெம்பராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

o o

பண்ணுருட்டி புறப்பேட்டை திராவிடர் கழகப் பொருளாளர் தோழர் எஸ். ஆலால சுந்தரம் அவர்களுக்கு சென்ற திங்களில் பிறந்த மகனுக்கு "இளங்கோ" எனப் பெயர் சூட்டப்பட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

பம்பாய் தோழர் எஸ். பெரியசாமியால், 'குடி அரசு' வளர்ச்சிக்கு நன்கொடையாக ரூ. 3. அளிக்கப்பட்டது.

* *

மதுரை தன் மதிப்பு இளைஞர் மன்றச் செயலாளரும் "புதுமைக் குறள்" ஆசிரியருமான தோழர் பண்டிட் கே. முத்துச்சாமி அவர்களால் தன் மகன் விசுவநாதனுக்கு நடைபெற்ற திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. ஒன்றும், 'திராவிடநாடு' வளர்ச்சிக்கு ரூ. ஒன்றும நன்கொடையளிக்கப்பட்டது.

* *

18-12-44ந் தேதி ஏற்காட்டில் இயற்கையெய்திய நமதியக்கத் தோழர் வி. ரஞ்சப்பன் அவர்களின் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

o o

திண்டிவனம் தோழர் அப்பாண்டைநாதன் அவர்களின் தந்தையார் இயற்கையெய்தியதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

ஓமலூர் தாலூகா திராவிடர் கழக நிர்வாக உறுப்பினராகிய ஜலகண்டபுரம் தோழர் வெ. குருசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவி தோழர் பாப்பாத்தி அம்மையாருக்குச் சென்ற 22-12-44-ந் தேதி பிறந்த பெண் குழவிக்குப் "புனிதவதி" என்று பெயரிடப்பட்டு அதன் நினைவுக் குறியாக 'குடி அரசு'க்கு ரூ. 1 அனுப்பப்பட்டது.

* *

அருப்புக்கோட்டை நூல் வியாபாரம் தோழர் அ. சா. கருப்பையா அவர்களால் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

ராசிபுரம் முத்துப்பண்டிதர் குமாரன் தோழர் அண்ணாமலைக்கு 10-12-44-ந் தேதி பெண்குழந்தை பிறந்ததை முன்னிட்டு 'குடி அரசு' பத்திரிகைக்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

* *

பின்னத்தூர் தோழர்கள் எஸ். கோபாலகிருஷ்ணன்—சிதம்பரனாருக்கும் பிறந்த பெண் மகவுக்கு 1-1-44-ந் தேதி 'மணிமொழி' என்று பெயரிடப்பட்டு "குடி அரசு" வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது


## HINDU HITLERISM

If you know the cause of India's downfull and betrayal into to subjection. Read the tragic history from Vedic days to the present in the most wonderful book *"The Meance of Hindu Imperialism"* by Swami Dharma Theertha, B. A. LLB., Only a few copies left. PP. 360, cloth bound Rs. 4—8—0.

## THE SECRET OF HINDU SANGATHAN (Same Author)

A passionate protest against the prevailing forms of Hindu Sangathan. Thought provoking cartoons make the volume more interesting and provocative PP. 50; Pucca binding; Re. 1—0—0.

## YOGA FOR ALL (2nd edition) (Same Author)

Scientific treatment, universal outlook, deep in spiritual fervour, entirely new approach to God-realisation as the goal of earthly life. PP-170, cloth bound; Rs. 1—12—0.

## YOGA OF THE HAPPY HOME (Same Author)

Describes the mental, moral and spiritual foundations of happy home life. A book by studying which you can make the home happy as certainly as you are Husband and wife. PP. 170; cloth bound, Rs. 2—8—0.

Apply to:—
***Happy Home Book Depot,*** Krishnanagar, Lahore.


ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மேலே போகப்பார்ப்பதைத் தவிர நாட்டுக்கு, இனத்திற்கு என்ன செய்ய முடிகிறது?

பதவியினால் நம்மக்களுக்கு, நாட்டுக்கு ஒரு நல்ல நலன் செய்த ஒரு, இரண்டு மூன்று ஆளைக்காட்டுங்கள் பார்ப்போம். இந்நிலையில் நீங்களும் அதே மாதிரிபடிப்புப்படித்து அதேவேலைசெய்வதில் என்ன பலன்?

இதைத்தான் நான் சொல்லி உங்களை சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேனே ஒழிய உங்களைப் படிக்காமல் செய்து கெடுப்பதற்குஆக அல்ல, அல்ல என்று சொல்லுகிறேன்.

ஆசிரியர்கள்

ஆசிரியர்களை நான் குறைவாகப் பேசியதாக சிலரால் சொல்லப்படுகிறது. ஆசிரியர்களில் நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குறைகூறவில்லை. ஆசிரியர்கள் என்றால் மேலே குறிப்பிடப்பட்ட ராஜாக்கள், சர்கள் முதலியவர்களைவிட என்ன பெரிய யோக்கியதை உடையவர்களாவார்கள். ஆசிரியர்கள் மற்ற உத்தியோக சேவைக்காரர்கள் போன்றவர்களைப் போல் ஊதியத்திற்கு உழைப்பவர்கள் தானே என்று சொல்லுகிறேன். இவர்கள் தனிப்பெருமை, "ஆச்சிரம குரு பக்தி" ஆகியவைகளை எதற்குஆக உரிமை பாராட்டுகிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை.

ஆசிரியர்கள் ஆசிரிய வேலைக்கென சர்க்காரால் சர்க்கார் நலனுக்குப் படிக்க வைத்து, படிக்கவைத்ததையே படிப்பிக்க பள்ளிக்கூடச் சொந்தக்காரர்களால் சம்பளத்துக்கு நியமிக்கப்படுகிறவர்கள் ஆவார்கள். இவர்களது சொந்தப் புத்திக்கு ஒப்பமுடியாத படிப்பாயிருந்தாலும் சம்பளத்துக்கு ஆக கண்டிப்பாய் கோடுதாண்டாமல் படிப்பிக்க வேண்டிய அடிமைகளேயாவார்கள். இவர்களது ஆசிரியர் வேலையும் மற்றவர்களுக்கு அவர்களது வாழ்விற்காகப் பயன்படுகிற தேடிப்பிடிக்கின்ற வேலையைப் போலவே ஒரு வாழ்வு அல்லது வயிற்றுப் பிழைப்பு வேலையாக அமைந்ததே தவிர மற்றபடியான ஒரு பெரிய தன்னல மறுப்பு—(தியாகம்) பொருந்தியசேவையும் வேலையுமல்ல.

"இன்றைய படிப்பு பயனற்றது, அறிவுக்குப் பயன்படாதது, நாட்டு நல உணர்ச்சியும், இன நல உணர்ச்சியும் அற்றது. அடிமைத் தன்மையைக் கற்பிக்கக்கூடியது என்பது விவாதத்திற்கு இடமில்லாமல் இவர்களுக்கும் அதிகமாகப் படித்த, அதிகப்பெருமை உடையவர்களால் ஒப்பமுடிந்தது" என்று ஆன பிறகு இந்தப் படிப்பைக் கற்றுக் கொடுத்து வாழும் வயிறுபிழைக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பும் ஆச்சாரியர் குருபட்டமும் எப்படிப் பொருந்த முடியும்? சர்க்கார் உத்தியோகமே அடிமை வேலை என்று பல அறிஞர்கள், ஏன் சர்க்கார் அதிகாரிகளே பலர் சொல்லும் போது இந்த மாதிரி அடிமைகளை தயார் பண்ணுபவர்கள் எப்படி மதிக்கப்படத்தகுதி உள்ளவர்கள் ஆகமுடியும்?

பள்ளிக்கூடமும் காப்பிக்கடையும்

பள்ளிக்கூடங்கள், இன்று காப்பி ஓட்டல்கள் முதலியவைகள் போல் ஒரு வியாபார ஸ்தலமாக ஆகிவிட்டன. பெரும்பான்மையான ஐஸ்கூல்கள் இன்று வருடம் 3000, 4000, 5000 ரூபாய் இலாபத்தில் நடைபெறுகின்றன; காலேஜுகளும் பல வழிகளில் ஸ்தாபகர்களுக்கு வியாபாரத்தைப் போலவே ஆதாயத்தை கொடுத்து வருகின்றன.

இந்த காப்பிக்கடை போன்ற பள்ளிக்கூடக் கடைகளில் காப்பி விநியோகிப்பதற்குப் பதிலாக கல்வி விநியோகிக்க (பரிமார) அமர்த்தப்பட்ட நபர்கள், அதுவும் முதலாளி சொன்னபடி அவன் தயாரித்த பதார்த்தங்களை அளவுப்படி குறிப்பிட்ட விலைக்குப் பரிமாறும் நபர்கள், எப்படி அன்னசத்திரம், காப்பி பலகார சத்திரம், கல்வி சத்திரம் வைத்த (கல்வி தானம் செய்த) பெருமையை அடைய உரியவர்கள் ஆவார்கள்?

ஒருவன் S. S. L. C. படிக்க மாதம் 6 அல்லது 7ரூபாய் செலவு செய்யவேண்டும். ஒருவன் F. A., B. A., படிக்க மாதம் 15, 20 ரூபாய் செலவு செய்ய வேண்டும். அயலூரில் போய் படித்தால் மேற் கொண்டு மாதம் 20, 30 ரூபாயாவது செலவு செய்ய வேண்டும். இந்நாட்டு மக்களின் சராசரி வரும்படி மாதம் 10, 15 ரூபாய்கூட இல்லை. உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் S. S. L. C. (ஹைஸ்கூல்) வகுப்பு உபாத்தியாயரானால் மாதம் சராசரி 100 ரூபாய், காலேஜ் உபாத்தியாயர் சம்பளமானால் மாதம் சராசரி 150 அல்லது 200 ரூபாய். இவை தவிர 500, 700, 1000 ரூபாயும் உண்டு. இப்படிச் சம்பளம் பெற்று ரூ 360 நாள்களில் 180 நாள் பள்ளிக்கூடம் திறந்து அதுவும் தொழிலாளி பெற்றோர் ஆகியவர்கள் தினம் 10மணி நேரம் வேலை செய்தால் அவன் மக்களுக்கு சம்பளம் பெற்று 5மணி நேரம் மாத்திரம் கற்றுக்கொடுத்துக்கொண்டு இருக்கிற உத்தியோகமும் நூற்றுக்கணக்கான ரூபாய் வருவாயும் உள்ளவர்கள். இந்தத் தொழிலைக ல்லவரும்படியும் சுகமும் உள்ள தொழில் என்று சொல்லலாமே தவிர இதை "தெய்வீகமும்" தன்னல மறுப்பும் உள்ள பாராட்டிப் பெருமைப்படுத்தி குருபீட பக்தியும் நன்றிவிஸ்வாசமும் காட்டப்படவேண்டிய தொழில் என்று சொல்ல என்ன ஆதாரம் இருக்கிறது? எங்கே இடமிருக்கிறது என்று யோசித்துப் பார்க்கும்படி என்னைக் குறைகூறும் ஆசிரியர்களை விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ஆசிரியர் கல்வி அறிவு

இந்து தேச சரித்திரம் கற்பிக்கும் சரித்திர ஆசிரியர் சரித்திரத்தோடு சரித்திரமாய் இராமாயண பாரதத்தையும் கற்பித்துவிடுகிறார். இந்து தேச சரித்திரத்துடனே இராமாயணமும், பாரதமும் பாடமாக வைக்கப்பட்ட புத்தகங்களே இந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட ஆசிரியர்கள் சரித்திர புத்தகம் எழுதினதற்காகவோ, அல்லது சரித்திரப் பாடம் கற்பிப்பதற்காகவோ எப்படிப் போற்றப்பட்டவர்கள் ஆவார்கள்? இவர்கள் எஜமானர்களுக்கு (அதாவது கல்வி இலாக்காவுக்கு) அடிமையாய் இருந்து கூலிக்குத் தொண்டாற்றுகிறவர்கள் என்றுதான் கருதும்படி நடந்து கொள்ளுகிறார்களே ஒழிய பாடப் புத்தகத்தில் உள்ள தவறுகளைக் கண்டித்து மறுத்துப் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில்லை. கற்பிக்க உரிமை கொண்டாடுவதுமில்லை. இப்படிப்பட்ட ஊதியத் தொண்டர்கள் பணம் செலவழித்தும் நாள்கள் பல கழிந்தும் பயனேற்படவில்லையே என்பவர்கள்மீது கோபித்தாலென்ன பயன்? செய்வதையும் செய்துவிட்டு தங்கள் பரிதாபத்தைப்பற்றி நினைக்காமல் எடுத்துக்காட்டுபவர்களை கோபித்தால் கல்வியின் தரம் உயர்ந்துவிடுமா? ஆசிரியர் தன்மை மேம்பட்டுவிடுமா? இப்படியே பூகோளம், வானசாஸ்திரம், ஆகியவைகளையும் எடுத்துப் பாருங்கள்.

சயன்ஸ் படித்த உடல்கூறு சாத்திரம் படித்த எந்த உபாத்தியாயர் கிரகணத்துக்கு தீட்டுகழிக்க முழுகாமலும் வெருகாய்ச் சட்டி, உப்புச்சட்டி ஆகியவைகளுக்கு சாந்தி கழிக்காமலும் "வீட்டுக்கு விலக்கான "பெண்களைத் தீண்டாதவர்களாய், நிழல்படாதவர்களாய் பாவிக்காமலும் எத்தனை உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள்? புராணங்களை சமய ஆதாரமாக புராணக் கதைகளை வாழ்க்கைக்கு வழிகோலியாய் இருக்கத் தக்க விதம் படிப்பிக்காத, புராணக் கதைகள்படி கடவுள்கள், பண்டிகைகள், உற்சவங்கள், அதிகுறிகள் கொண்டாடாத உபாத்தியாயர்கள் எத்தனை பேர்கள் இருக்கக்கூடும்? இவர்களால் இவற்றால் இதனால் எல்லாம் இவ்வளவு செலவு செய்து படிக்கும் பிள்ளைகளுக்கு என்ன லாபம்இருக்கிறது. இதுவரை படித்துவந்த இந்தப் படிப்பினால் நாமும் இனமும், அடைந்த பயன் என்ன? சூத்திரன் என்பதற்கு வெட்கப்பட்டு புரட்சி செய்ய எவருக்கு உணர்ச்சி ஏற்பட்டது? ஏற்படாவிட்டாலும் காரியத்தில் வாழ்க்கையில் அடியோடு அவ்வாதாரங்களை வெறுத்த ஆசிரியர் எத்தனை பேர் உண்டு?

ஆகவே மாணவர்களே நீங்கள் இந்தப் படிப்பு படிக்காவிட்டால் அறிவு இல்லாதவர்களாக ஆகிவிடமாட்டீர்கள்; இந்தப் படிப்புப் படித்ததினாலேயே பெரிய அறிவாளி ஆகிவிடமாட்டீர்கள்.

நீங்கள் படிக்கும் இவ்வளவு சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், வர்ண சாஸ்திரம், உடல்கூறு சாஸ்திரம் முதலியவை உங்கள் வாழ்வில், நீங்கள் டிப்டி கலெக்டரோ, கலெக்டரோ, முன்சீப்போ, ஜட்ஜியோ ஆனாலும் கூட அதற்கு எதாவது பயன்படுகிறதா? பரீட்சையில் உங்களை வாட்டவும் உங்கள் படிப்பை நீடிக்கச் செய்யவும் படிப்புக்கு அதிகப் பணம் செலவு செய்யவும் இதன்பேரால் பலர் பிழைக்கவும் பயன்படுவதல்லாமல் உங்கள் உத்தியோகத் தினசரி நடப்புக்குப் பயன்படுகிறதா?

எனவே எவ்வளவு மோசமான கல்வி? எவ்வளவு மோசமான கல்வி ஸ்தாபனம்? எவ்வளவு மோசமான ஆசிரியர் எவ்வளவு மோசமான, படிப்பிக்கும்தன்மை என்று பாருங்கள். (தொடரும்)

## வேண்டுகோள்

தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு ஜில்லா தோழர்களுக்கு,

ஜில்லா ஒன்றுக்குக் குறைந்தது 5000 கழக அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக எனது தஞ்சை ஜில்லா தோழர்கள் சேலம் ஜில்லாவைக் கண்டு கொண்டு பார்த்து ஆவனச் செய்வார்களென்று நம்புகிறேன்.

கும்பகோணம் கழக சம்பந்தமாக ரசீது புத்தகம் வாங்கி அங்கத்தினர்கள் சேர்த்து வரும் தோழர்கள் தங்களிடம் உள்ள கழக அங்கத்தினர் புத்தகம், சேர்ந்த மெம்பர் ரசீதுகள், அதன் சந்தாதொகைகள், சேர்க்கப்படாத பாக்கி ரசீதுகள் உள்படவும் விரைவில் எனக்குக் கிடைக்கும்படி செய்ய கேட்டுக் கொள்கிறேன்.

கே. கே. நீலமேகம்,
கும்பகோணம்.

## 2-வது பிரிவினை ஆதரிப்பு மகாநாடு

வருகிற 1945 மார்ச்சு, முதல் வாரத்தில் தஞ்சை ஜில்லாவில் கூடுகிறது. பிரபல முஸ்லிம் தலைவர்களும் பிரபல திராவிடத் தலைவர்களும் மகாநாட்டில் கலந்துகொள்ளுகிறார்கள். இடம், நாள், காலம் பின்னர் அறிவிக்கப்படும்.

அமைப்பாளர்கள்!
எம். ஏ. ஷம்சுத்தீன், வல்லம்,
[illegible] ரெங்கராசு, திருவாரூர்.

## புதுப்பேட்டை மாணவர் மாநாடு

### நிறைவேறிய தீர்மானங்கள்

3-2-45-ல் புதுப்பேட்டையில் நடைபெற்ற தென்னார்க்காடு மாவட்ட திராவிட மாணவர் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள்:

1. இன்று பள்ளிக்கூடங்களில் வைத்துள்ள பாடத் திட்டங்களில் புராணக் கருத்துக்களை புகுத்தாமல் அறிவு வளர்ச்சிக்குரிய வழிகளில் அமைக்கவேண்டும்.
2. இன்னும் கல்லூரிகளிலுள்ள உணவு விடுதிகளில் ஆரியர் திராவிடரை இழிவுபடுத்துவதை உடனே ஒழிக்க வேண்டும்.
3. திராவிடநாட்டுப் பிரிவினையை இம்மாநாடு முழுமனதுடன் ஆதரிக்கிறது.
4. பெரியார் ஈ. வெ. ராமசாமியைக் கட்சியின் பெயரால் தூற்றிவரும் அதனையும் அப்சர்வரையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் பெரியாரின் மேல் முழு நம்பிக்கையைக் கொள்கிறது.
5. இசையரங்குகளிலும், படக்காட்சிகளிலும் பாடப்பட்டுவரும் பகுத்தறிவிற்கொவ்வாத பாடல்களை முழுமனதுடன் எதிர்க்கிறது.
6. தமிழரியக்கத்துக்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிக்கும் விரோதியாயிருந்து இந்திகட்டாயத்தை ஆதரித்த தோழர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையைத் தமிழர் பல்கலைக் கழகம் என்று சொல்லிக் கொள்ளும் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக நியமித்திருப்பது கண்டு இம்மாநாடு வருந்துகிறது.

எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேறின.

## ராவ்பகதூர் டாக்டர் மதுரம் நினைவுக் கமிட்டி

### மேலும் பல அங்கத்தினர் விபரம்

திருச்சி, பிப். 2—

திருச்சி ஜில்லா பிரமுகர் காலஞ்சென்ற ராவ்பகதூர் டாக்டர் ஏ. மதுரம் அவர்கள் நினைவுக் கமிட்டியில், ஏற்கனவே அறிவித்துள்ளவர்கள் போக, மேலும் கீழ்க்கண்டவர்களும் அங்கத்தினர்களாகச் சேர்ந்து தங்கள் ஒத்துழைப்பை அளிப்பதாக கடிதம் எழுதியிருக்கின்றனர்:-

மிஸ்டர் டபுள்யூ. எச். மிட்சேல் ஜில்லா கலெக்டர் திருச்சி, ரைட் ரெவரெண்ட் பிஷப் சாண்டிகிரீன், தாங்கம்பட்டி ஹவுஸ், எச். ஜே. கிரேக் தெ. இ. ர. சிப் கமர்ஷியல் சூபரிண்டெண்ட், ராவ்பகதூர் ஆல்பர்ட் ஜேசுதாசன் சென்னை, டேனியல்தாமஸ் சேர்மென் [illegible], ராவ்பகதூர் பி. எஸ். சிவஞான முதலியார் ரிடையர்டு சப் ஜட்ஜ் புதுக்கோட்டை, ரெவரண்ட் பாதர் எர்ஹார்ட் பிரின்சிபால் செண்ட் ஜோசப் காலேஜ் திருச்சி, ஏ. வி. தாமஸ் ஆலப்பிழை, எல். என். எஸ். மணி திருநிதி பாங்க் திருச்சி, ஆர். ஸ்ரீனிவாசய்யர் அட்வகேட் திருச்சி, கான் சாகிப் என். எம். காஜாமியான் ராவுத்தர் திருச்சி, கான்சாகிப் ஏ. எம். ஷாகுல் ஹமீது திருச்சி, கே. சீனிவாசய்யங்கார் சேர்மென் ஸ்ரீரங்கம், பி. ஆர். தேவர், எம். எல். ஏ. திருச்சி, எஸ். செங்கமலம் பிள்ளை கவர்ன்மெண்ட் பிளீடர் திருச்சி, டி. கே. பெரியசாமி பிள்ளை மிராசுதார் உறையூர், சி. ஆர். அந்தோணி பி. ஏ. திருச்சி, விக்டர் குமாரதுரை எம். ஏ. திருச்சி, ஏ. துரைசாமி ராஜா தஞ்சாவூர்.

16,500 ரூபாய் செலவில் அவரின் முழு உருவச்சிலை அமைப்பதென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என தோழர் டி. எம். முத்து (ஆசிரியர் "திராவிட மணி") கன்வீனர் அறிவிக்கிறார்.

சேலம் திராவிடர் முடிதிருத்தும் நிலையம் தோழர் எஸ். எஸ். கோவிந்தன் வெளியிட்டுள்ள வேண்டுகோளில், மாகாண மருத்துவர் மாநாடு 7, 8 மாதங்களாகியும் மாகாண கமிட்டிக் கூட்டம் போடாமல் இருப்பதால் உடனே டை கூட்டத்தைக் கூட்டும்படி கேட்டுக் கொண்டிருக்கிறார்.


## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

4 அணா புத்தகங்கள்

இராமாயண ஆராய்ச்சி
,, பால காண்டம்
,, ஆரண்ய காண்டம்
,, கிட்கிந்தா காண்டம்
பகுத்தறிவு அல்லது மரண சாஸனம்
முதல் பாகம்
டை இரண்டாம் பாகம்
மதப்புரட்சி
வால்டையரின் வாழ்க்கைச் சரிதம்
பரிணாமவாதம்
இந்தியமாதா
பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை
இங்கர்சால் பொன்மொழிகள்
ஜாதியை ஒழிக்கவழி (டாக்டர் அம்பத்கார் எழுதியது)
சோதிட ஆராய்ச்சி (ஈ. வெ. ரா.)
பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)
கடவுளும், பிரபஞ்சமும்

கிடைக்குமிடம்:
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.